05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# UNSUR KETUHANAN MENGIKUT ETNOGRAFI SEJARAH DALAM EPIK SILAPATHIKARAM DENGAN MASYARAKAT INDIA DI MALAYSIA

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

GUNASEKARAN A/L KUPPUSAMY

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
2020

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# UNSUR KETUHANAN MENGIKUT ETNOGRAFI SEJARAH DALAM EPIK SILAPATHIKARAM DENGAN MASYARAKAT INDIA DI MALAYSIA

GUNASEKARAN A/L KUPPUSAMY

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

TESIS DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT UNTUK MEMPEROLEH
IJAZAH SARJANA SASTERA (KESUSASTERAAN TAMIL)
(MOD PENYELIDIKAN)

FAKULTI BAHASA DAN KOMUNIKASI
UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
2020

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# சிலப்பதிகாரக் காப்பியத்தின் வரலாற்று இனவரைவியல் தெய்வக் கூறுகளுடன் மலேசிய இந்தியச் சமூகம்

குணசேகரன் த/பெ குப்புசாமி

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழ்ப் பிரிவு
மொழி மற்றும் தொடர்பு புலம்
சுல்தான் இட்ரிஸ் கல்வியல் பல்கலைக்கழகம்
தஞ்ஜோங் மாலிம்
2020

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

**Sila tanda (√)**
Kertas Projek ☐
Sarjana Penyelidikan ☐
Sarjana Penyelidikan dan Kerja Kursus ☐
Doktor Falsafah ☐

**INSTITUT PENGAJIAN SISWAZAH**

**PERAKUAN KEASLIAN PENULISAN**

Perakuan ini telah dibuat pada .........(hari bulan)................ (bulan) 20........

**i. Perakuan pelajar :**

Saya, ______________________________________________ (SILA NYATAKAN NAMA PELAJAR, NO. MATRIK DAN FAKULTI) dengan ini mengaku bahawa disertasi/tesis yang bertajuk ______________________________________________

______________________________________________

______________________________________________

adalah hasil kerja saya sendiri. Saya tidak memplagiat dan apa-apa penggunaan mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dilakukan secara urusan yang wajar dan bagi maksud yang dibenarkan dan apa-apa petikan, ekstrak, rujukan atau pengeluaran semula daripada atau kepada mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dinyatakan dengan sejelasnya dan secukupnya

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

______________________

Tandatangan pelajar

**ii. Perakuan Penyelia:**

Saya, ______________________________ (NAMA PENYELIA) dengan ini mengesahkan bahawa hasil kerja pelajar yang bertajuk ______________________________

______________________________________________

______________________________________________

(TAJUK) dihasilkan oleh pelajar seperti nama di atas, dan telah diserahkan kepada Institut Pengajian Siswazah bagi memenuhi sebahagian/sepenuhnya syarat untuk memperoleh Ijazah ______________________________________________ (SLA NYATAKAN NAMA IJAZAH).

______________________ ______________________

Tarikh Tandatangan Penyelia

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

## INSTITUT PENGAJIAN SISWAZAH / *INSTITUTE OF GRADUATE STUDIES*

## BORANG PENGESAHAN PENYERAHAN TESIS/DISERTASI/LAPORAN KERTAS PROJEK
## *DECLARATION OF THESIS/DISSERTATION/PROJECT PAPER FORM*

Tajuk / *Title*: ______________________________
______________________________

No. Matrik /*Matric's No.*: ______________________________

Saya / *I* : ______________________________

(Nama pelajar / *Student's Name*)

mengaku membenarkan Tesis/Disertasi/Laporan Kertas Projek (Kedoktoran/Sarjana)* ini disimpan di Universiti Pendidikan Sultan Idris (Perpustakaan Tuanku Bainun) dengan syarat-syarat kegunaan seperti berikut:-
*acknowledged that Universiti Pendidikan Sultan Idris (Tuanku Bainun Library) reserves the right as follows:-*

1. Tesis/Disertasi/Laporan Kertas Projek ini adalah hak milik UPSI.
   *The thesis is the property of Universiti Pendidikan Sultan Idris*

2. Perpustakaan Tuanku Bainun dibenarkan membuat salinan untuk tujuan rujukan dan penyelidikan.
   *Tuanku Bainun Library has the right to make copies for the purpose of reference and research.*

3. Perpustakaan dibenarkan membuat salinan Tesis/Disertasi ini sebagai bahan pertukaran antara Institusi Pengajian Tinggi.
   *The Library has the right to make copies of the thesis for academic exchange.*

4. Sila tandakan ( √ ) bagi pilihan kategori di bawah */ Please tick ( √ ) for category below:-*

| | | |
|---|---|---|
| ☐ | **SULIT/*CONFIDENTIAL*** | Mengandungi maklumat yang berdarjah keselamatan atau kepentingan Malaysia seperti yang termaktub dalam Akta Rahsia Rasmi 1972. / *Contains confidential information under the Official Secret Act 1972* |
| ☐ | **TERHAD/*RESTRICTED*** | Mengandungi maklumat terhad yang telah ditentukan oleh organisasi/badan di mana penyelidikan ini dijalankan. / *Contains restircted information as specified by the organization where research was done.* |
| ☐ | **TIDAK TERHAD / *OPEN ACCESS*** | |

______________________________
(Tandatangan Pelajar/ Signature)

______________________________
(Tandatangan Penyelia / *Signature of Supervisor*) & (Nama & Cop Rasmi / *Name & Official Stamp*)

Tarikh: ________________

Catatan: Jika Tesis/Disertasi ini **SULIT** @ **TERHAD**, sila lampirkan surat daripada pihak berkuasa/organisasi berkenaan dengan menyatakan sekali sebab dan tempoh laporan ini perlu dikelaskan sebagai **SULIT** dan **TERHAD**.

*Notes: If the thesis is CONFIDENTAL or RESTRICTED, please attach with the letter from the organization with period and reasons for confidentiality or restriction.*

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**நன்றியுரை**

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. *(குறள் 102)*

இவ்வாய்வு பணியை முழுமைப் பெற உதவிய இவ்வாய்வின் நெறியாளரான முனைவர். இளங்குமரன் மற்றும் முனைவர். வீரலக்சுமி அவர்களுக்கு இவ்வேளையில் நன்றியினைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். இவ்வாய்வு பணியை மேற்கொள்ள, என்னைப் பல்கலைக்கழகம் வரை ஊக்கம் அளித்துப் படிக்க வைத்த என் பெற்றோர்களான திரு. குப்புசாமி மாரியாயி அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து, எனது உடன் பிறப்புகளுக்கும் நண்பர்களுக்கும் மனமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# சிலப்பதிகாரக் காப்பியத்தின் வரலாற்று இனவரைவியல் தெய்வக் கூறுகளுடன் மலேசிய இந்தியச் சமூகம்

## ஆய்வுச்சுருக்கம்

இந்த ஆய்வின் நோக்கம் மலேசியாவில் உள்ள இந்தியச் சமூகத்துடன் சிலப்பதிகாரக் காப்பியத்தின் வரலாற்று இனவரைவியல் தெய்வக் கூறுகளோடு ஆராய்வதாகும். வரலாற்று இனவரைவியல் என்பது மானுடவியலின் ஒரு பிரிவு ஆகும். இது பழங்குடியினரின் வளர்ச்சியைக் குறிப்பிட்டப் பண்புகளின் அடிப்படையில் ஆராய்வதாகும். எதிர்கால சந்ததியினருக்கான வரலாற்றுப் பொருளாக அமைய ஆய்வு செய்யப்படுகின்றது. சிலப்பதிகாரக் காப்பியம் இலக்கியம் வடிவம் பெற்றதனால் ஆய்வாளர் காப்பியத்தின் தரவுகளைப் பகுப்பாய்வு செய்ய பண்புசார் அணுகுமுறையைப் பயன்படுத்தியுள்ளார். ஆய்வாளர் மலேசிய மக்களின் வாழ்க்கை முறையின் தரவுகளைத் திரட்ட படங்கள் மற்றும் கலைப்பொருட்கள் கொண்டு களப்பணியை மேற்கொண்டுள்ளார். சிலப்பதிகாரக் காப்பியம் இளங்கோவடிகளால் கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் சங்க காலத்தில் இயற்றப்பட்டது. இந்தக் காப்பியம் பண்டைய கால மக்களின் வாழ்க்கை முறையைச் சித்தரிக்கின்றது. தமிழ் இலக்கியத்தில் நிறைய காப்பியங்கள் இருந்த போதிலும் சிலப்பதிகாரக் காப்பியத்தில் காணப்பெறும் தெய்வக் கூறுகள் குறைந்த அளவிலேயே ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மானிடவியல் துறையில் நிபுணத்துவம் பெற்ற பக்தவத்சல பாரதி ஒரு குறிப்பிட்ட இனக்குழுவின் வாழ்க்கையை ஆராயும் இனவரைவியல் கூறுகள் சிலப்பதிகாரக் காப்பியத்தில் இருப்பதாகக் கூறுகின்றார். பக்தவத்சல பாரதி பழங்குடியினரின் தோற்றம் குறித்து 52 கூறுகளைக் கொண்டு ஆராய்வை மேற்கொள்ளலாம் என்கின்றார். பக்தவத்சல பாரதி அமைத்த மாதிரி படி தெய்வங்கள், நம்பிக்கை, சமயம், விழாக்கள், வழிபாட்டு முறை ஆகிய 5 பிரிவுகள் தெய்வத்தைக் குறிப்பதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. சிலப்பதிகாரக் காப்பியத்தின் பகுப்பாய்வு முறை பக்தவத்சல பாரதியின் மாதிரியைக் கொண்ட 52 கூறுகளில் தெய்வ வகைகள், வழிபாட்டு முறை, சமயம், நம்பிக்கை, விழாக்கள் ஆகிய 5 கூறுகள் மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வின் கண்டுப்பிடிப்பின் மூலம் சிலப்பதிகாரக் காப்பியத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் பல தெய்வங்களை வணங்குதல்; வழிபாட்டு முறைகள்; தெய்வங்களின் மீது அதீத நம்பிக்கை; விழாக்கள் கொண்டாடியும் மற்றும் சமயங்களையும் பின்பற்றியும் வாழ்ந்துள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது. காப்பியத்தில் உள்ள தெய்வக் கூறுகள் மலேசியாவில் உள்ள இந்திய மக்கள் தெய்வங்களின் மீது கொண்டுள்ள வாழ்க்கை முறையிலும் ஒன்றி காணப்படுகின்றது. பண்டைய சிலப்பதிகாரக் காப்பியத்தில் தெய்வ வகைகள், நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், விழாக்கள், சமயங்கள் ஆகியவற்றின் கூறுகள் மலேசிய இந்திய மக்களின் தெய்வ வழிபாட்டு நம்பிக்கையுடன் பொருந்தி வந்துள்ளதனை இந்த ஆய்வின் முடிவு காட்டுகின்றது. ஆய்வின் பயன்பாட்டின் மூலம், மலேசிய இந்திய மக்களிடம் மேலும் சமய நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகளை வலுப்படுத்துவதில் சிலப்பதிகாரக் காப்பியத்தை ஒரு குறிப்பாகப் பயன்படுத்தலாம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# UNSUR KETUHANAN MENGIKUT ETNOGRAFI SEJARAH DALAM EPIK SILAPATHIKARAM DENGAN MASYARAKAT INDIA DI MALAYSIA

## ABSTRAK

Kajian ini bertujuan untuk mengkaji unsur ketuhanan mengikut etnografi sejarah dalam epik Silapathikaram dengan masyarakat India di Malaysia. Etnografi sejarah merupakan satu cabang dalam bidang antropologi yang mengkaji asal-usul sesebuah suku kaum berdasarkan ciri-ciri khusus yang dikaji untuk dijadikan sebagai sebagai bahan sejarah untuk generasi akan datang. Oleh kerana, epik Silapathikaram merupakan dalam bentuk kesusasteraan penyelidik menggunakan kaedah kualitatif untuk menganalisis kandungan dalam epik tersebut untuk memungut data kajian. Pengkaji telah melakukan kajian lapangan dengan mengambil gambar dan artifak untuk mengumpul data mengenai cara hidup masyarakat India di Malaysia terhadap Tuhan. Epik Silapathikaram yang dikaryakan oleh Ilanggovadigal pada kurun 2 masihi iaitu pada Zaman Sangam. Epik ini mengambarkan gaya hidup masyarakat pada zaman purba. Walaupun terdapat banyak epik dalam kesusasteraan Tamil unsur ketuhanan yang terdapat dalam epik ini kurang dikaji oleh para penyelidik. Bakthavatsala Barathi merupakan seorang pakar dalam bidang antropologi menyifatkan terdapat unsur Etnografi yang mengaji tentang gaya hidup suku kaum dalam epik ini. Bakthavatsala Barathi menyifatkan terdapat 52 ciri boleh digunakan untuk mengkaji asal-usul suku kaum. Berdasarkan model Bakthavatsala Barathi, lima aspek ini dianggap penting iaitu jenis tuhan, kepercayaan, agama, sambutan, cara penyembahan boleh dikategorikan di bawah aspek yang menerangkan ketuhanan. Analisis epik Silapathikaram dijalankan dengan menggunakan model Bakthavatsala Barathi yang mengkaji 5 unsur ketuhanan sahaja, iaitu jenis tuhan, cara penyembahan tuhan, agama, kepercayaan, sambutan terhadap tuhan yang diambil daripada 52 ciri-ciri tersebut. Dapatan kajian menunjukkan masyarakat Tamil yang digambarkan dalam epik Silappathikaram menyembah pelbagai Tuhan; mengikuti pelbagai cara untuk penyembahan terhadap Tuhan; mempunyai kepercayaan yang tinggi terhadap Tuhan; menyambut pelbagai sambutan dan menganuti pelbagai agama. Unsur-unsur ketuhanan dalam epik tersebut juga mempunyai persamaan dalam cara hidup masyarakat India di Malaysia terhadap Tuhan. Kesimpulan kajian ini menunjukkan bahawa unsur-unsur ketuhanan, kepercayaan, cara penyembahan, agama dalam epik kuno Silapathikaram adalah sama dengan kepercayaan dan ibadat kaum India di Malaysia. Implikasinya, epik Silapthikaram boleh dijadikan rujukan dalam menguatkan kepercayaan dan amalan keagamaan untuk kaum India di Malaysia.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**DIVINE ELEMENT OF HISTORICAL ETHNOGRAPHY IN EPIC SILAPATHIKARAM WITH THE INDIA COMMUNITY IN MALAYSIA**

## ABSTRACT

The purpose of this study is to study the divine element according to historical ethnography in Silapathikaram epic with the Indian community in Malaysia. Historical ethnography is a branch of anthropology that examines the origins of a tribe based on specific characteristics that have been studied to serve as historical material for future generations. As such, the epic of Silapathikaram is a literary form of researchers using qualitative methods to analyze the content of the epic to collect research data. Researchers have conducted fieldwork by taking pictures and artifacts to collect data on the way of life of the Indian people in Malaysia to God. The Silapathikaram epic was written by Ilanggovadigal in the 2nd century AD, in the Sangam Age. This epic depicts people's lifestyle in ancient times. Although there are many epics in Tamil literature the divine elements found in this epic have not been studied by the researchers. Bakthavatsala Barathi is an anthropologist specializing in ethnographic elements that teach the ethnic lifestyle of this epic. Bakthavatsala Barathi says there are 52 features that can be used to study tribal origins. According to the model of Bakthavatsala Barathi, these five aspects are considered important. That is the nature of god, belief, religion, worship, the way of worship can be categorized under the aspect that describes the divine. Silapathikaram's epic analysis was performed using Bakthavatsala Barathi's model that studied only 5 divine elements, the types of gods, the ways of worship, the religion, the beliefs, the festival to the gods drawn from these 52 features. The findings show that the Tamil people depicted in the epic Silappathikaram worship various Gods; following the various ways of worshiping God; have a high trust in God; welcomed various celebrations and embraced various religions. The divine elements in the epic also have similarities in the way of life of the Indian people in Malaysia to God. The conclusion of this study shows that the elements of divinity, beliefs, ways of worship, religion in Silapathikaram's ancient epic are similar to the beliefs and worship of Indians in Malaysia. The implication is that Silapthikaram epic can be used as a reference in strengthening religious beliefs and practices for Indians in Malaysia.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **நன்றியுரை** | iii |
| **ஆய்வுச்சுருக்கம்** | iv |
| Abstrak | v |
| Abstract | vi |
| **பொருளடக்கம்** | vii |
| **வரைபடம் பட்டியல்** | xv |
| **ஆய்வின் குறிப்புச் சொற்கள்** | xvi |
| **பின்னிணைப்பு பட்டியல்** | xviii |
| **இயல் 1 அறிமுகம்** | |
| 1.1 முன்னுரை | 1 |
| 1.2 ஆய்வு பின்னனி | 2 |
| 1.3 ஆய்வு சிக்கல் | 8 |
| 1.4 ஆய்வு நோக்கம் | 17 |
| 1.5 ஆய்வு வினா | 18 |
| 1.6 ஆய்வு நன்மைகள் | 18 |
| 1.7 ஆய்வு எல்லை | 25 |
| 1.8 ஆய்வு சான்றாதாரங்கள் | 26 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



1.8.1 முதன்மைச் சான்றாதாரம் 26

1.8.2 துணைமைச் சான்றாதாரம் 27

1.9 கலைச்சொல் விளக்கம் 27

1.9.1 சிலப்பதிகாரம் 27

1.9.2 மானுடவியல் 29

1.9.3 பண்பாடு 29

1.9.4 இனவரைவியல் 29

1.9.5 இனம் 30

1.9.6 இனக்குழு 30

1.9.7 வரலாறு 31

1.10 தொகுப்புரை 31

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**இயல் 2 முந்தைய ஆய்வுகள்**

2.1 முன்னுரை 33

2.2 சிலப்பதிகாரம் 34

2.3 காப்பிய உள்ளடக்கம் 37

2.3.1 புகார்க்காண்டம் 38

2.3.2 மதுரைக்காண்டம் 40

2.3.3 வஞ்சிக்காண்டம் 41

2.4 மானிடவியல் 42

2.5 மானிடம் 43

2.6 இனவரைவியல் 44

2.7 இனவரைவியல் வகைகள் 45

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


2.7.1 முழுமை இனவரைவியல் 46

2.7.2 தனித்துவம்சார்ந்த இனவரைவியல் 46

2.7.3 ஒழுங்கமைப்புசார் இனவரைவியல் 46

2.7.4 அன்றாட நிகழ்வுகள் சார்ந்த இனவரைவியல் 47

2.7.5 தன் இனவரைவியல் 47

2.7.6 வாழ்க்கை வரலாறு சார்ந்த இனவரைவியல் 48

2.7.7 வரலாற்று இனவைவியல் 48

2.8 முனைவர் பட்ட ஆய்வுகள் 49

2.9 முதுகலைப் பட்ட ஆய்வுகள் 57

2.10 ஆய்வுக்கட்டுரைகள் 60

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

2.11 புத்தகம் 77

2.12 முந்தைய ஆய்வைப் பற்றிய ஆய்வாளரின் கண்ணோட்டம் 92

2.13 தொகுப்புரை 93

**இயல் 3 ஆய்வு நெறிமுறை**

3.1 முன்னுரை 95

3.2 ஆய்வு வடிவமைப்பு 96

3.3 ஆய்வு அணுகுமுறை 97

3.3.1 விளக்கமுறை ஆய்வு 98

3.3.2 பகுப்பு முறை ஆய்வு 99

3.4 ஆய்வு கட்டமைப்பு 101

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



3.5 தரவு சேகரிக்கும் முறை 102

3.5.1 தரவுகளை வாசித்தல் 103

3.5.2 தரவுகளைத் தேர்ந்தெடுத்தல் 103

3.5.3 தரவுகளைப் பகுத்தாய்தல் 104

3.6 தரவு பகுப்பாய்வு முறை 104

3.7 ஆய்வு கோட்பாடு 105

3.8 கோட்பாடு கட்டமைப்பு 108

3.9 தொகுப்புறை 109

**இயல் 4 பகுப்பாய்வு**

4.1 முன்னுரை 110

4.2 தெய்வங்கள் 111

4.2.1 திங்கள் 112

4.2.2 சூரியன் 114

4.2.3 மழை 116

4.2.4 சிவன் 119

4.2.5 திருமால் 125

4.2.6 முருகன் 132

4.2.7 கொற்றவை 137

4.2.8 திருமகள் 143

4.2.9 அருகன் 144

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.2.10 மதுராபதி தெய்வம் 147

4.2.11 அமரர் தரு 149

4.2.12 வெள்யானை 150

4.2.13 புகர்வெள்ளை நாகர் 151

4.2.14 பலராமன் 152

4.2.15 இந்திரன் 152

4.2.16 புறம்பணையான் 156

4.2.17 பூதங்கள் 156

4.2.18 பாசண்ட சாத்தான் 158

4.2.19 சயந்தன் 159

4.2.20 பிறத் தெய்வங்கள் 160

4.2.21 இயக்கி 163

4.2.22 காமன் 163

4.2.23 தீக்கடவுள் 164

4.2.24 காவல் தெய்வம் 165

4.2.25 பத்தினித் தெய்வம் 166

4.2.26 பிரமன் 171

4.2.27 புத்தர் 172

4.2.28 முனிவர்கள் 173

4.3 வழிபாட்டு முறைகள் 174

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



4.3.1 நிவேதனப் பொருள் 174

4.3.2 பலி கொடுத்தல் 176

4.3.3 மந்திரத்தை உச்சரித்தல் 177

4.3.4 தியானம் செய்தல் 179

4.3.5 கூட்டுப் பிரத்தனை 180

4.3.6 தெய்வ துதிப்பாடல் 181

4.3.7 வேதம் திருநாமங்கள் ஓதுதல் 182

4.3.8 வேள்வி செய்தல் 183

4.3.9 இல்லங்களில் விளக்கேற்றுதல் 183

4.4 நம்பிக்கைகள் 184

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.4.1 வெறியாடுதல் 185

4.4.2 பிறருக்காக வேண்டுதல் 186

4.4.3 வினையின் மூலம் தண்டணை 187

4.4.4 நல்ல நேரம் பார்த்தல் 188

4.4.5 புலாலைத் தவிர்த்தல் 189

4.4.6 நடப்பது எல்லாம் தெய்வத்தின் செயல் 189

4.4.7 தண்டனையைத் தெய்வத்திடம் விட்டு விடுதல் 190

4.4.8 தெய்வம் கனவில் தெரிவித்தல் 191

4.4.9 நவக்கிரகங்கள் 192

4.4.10 நோன்பு எடுத்தல் 193

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



4.4.11 உகுந்த நாளைப் பின்பற்றுதல் 194

4.4.12 விதிமுறைகளைப் பின்பற்றுதல் 195

4.4.13 சின்னங்களும் அடையாளங்களும் 196

4.5 சமயங்கள் 198

4.5.1 சைவம் 199

4.5.2 வைணவம் 200

4.5.3 கௌமாரம் 200

4.5.4 சாக்தம் 201

4.5.5 சௌரம் 201

4.5.6 சமணம் 201

4.5.7 புத்தம் 202

4.6 விழாக்கள் 203

4.6.1 இந்திர விழா 203

4.6.2 காமன் விழா 204

4.6.3 கொற்றவை விழா 204

4.6.4 வெறியாட்டு விழா 205

4.6.5 பத்தினி விழா 205

4.7 தொகுப்புரை 206

**இயல் 5 கலந்துரையாடல்**

5.1 முன்னுரை 208


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


5.2 ஆய்வின் கண்டுப்பிடுப்புகள் 209

5.3 கலந்துரையாடல் 221

5.4 கண்டுப்பிடிப்பின் பயன்பாடு 229

5.5 வருங்கால ஆய்வின் பரிந்துரை 233

5.6 தொகுப்புறை 235

**துணைப்பட்டியல்** 236

**பின்னிணைப்பு** 242

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**வரைபடம் பட்டியல்**


| வரைபட எண் | | பக்கம் |
|---|---|---|
| 3.1 | ஆய்வு கட்டமைப்பு | 101 |
| 3.2 | கோட்பாடு கட்டமைப்பு | 108 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## ஆய்வின் குறிப்புச் சொற்கள்

| | |
|---|---|
| சில | சிலப்பதிகாரம் |
| புகா | புகார்க் காண்டம் |
| மது | மதுரைக் காண்டம் |
| வஞ் | வஞ்சிக் காண்டம் |
| மங் | மங்கல வாழ்த்துப் பாடல் |
| மனை | மனையறம் படுத்த காதை |
| அர | அரங்கேற்றுக் காதை |
| அந் | அந்திமாலைச் சிறப்புச்செய் காதை |
| இந் | இந்திரவிழவு ஊர் எடுத்த காதை |
| கட | கடல் ஆடு காதை |
| கான | கானல் வரி |
| வேனி | வேனிற் காதை |
| கனா | கனாத்திறம் உரைத்த காதை |
| நாடு | நாடுகாண் காதை |
| காடு | காடுகாண் காதை |
| வேட் | வேட்டுவ வரி |
| புற | புறஞ்சேரி இறுத்த காதை |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


| | |
|---|---|
| ஊர் | ஊர் காண் காதை |
| அடை | அடைக்கலக் காதை |
| கொலை | கொலைக்களக் காதை |
| ஆய் | ஆய்ச்சியர் குரவை |
| துன் | துன்ப மாலை |
| ஊர் | ஊர்சூழ் வரி |
| வழ | வழக்குரை காதை |
| வஞ் | வஞ்சின மாலை |
| அழ | அழற்படு காதை |
| கட் | கட்டுரை காதை |
| குன் | குன்றக் குரவை |
| காட் | காட்சிக் காதை |
| கால் | கால்கோட் காதை |
| நீர் | நீர்ப்படைக் காதை |
| நடு | நடுகற் காதை |
| வாழ் | வாழ்த்துக் காதை |
| வர | வரந்தரு காதை |
| பக் | பக்கம் |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**பின்னிணைப்பு பட்டியல்**


| | |
|---|---|
| பின்னிணைப்பு அ | அட்டவணை |
| பின்னிணைப்பு ஆ | செய்திகள் |
| பின்னிணைப்பு இ | படங்கள் |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# இயல் 1

# அறிமுகம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.1 முன்னுரை

தமிழ் அன்னை அடி முதல் முடிவரை அணிந்துள்ள நகைகளாக ஐம்பெருங்காப்பியங்கள் போற்றப்படுகின்றன (இராஜாராம், 2003). இவற்றில் சிலப்பதிகாரம் ஐம்பெருங்காப்பியங்களில் காலத்தால் முந்தியது ஆகும் (இராமசுப்பிரமணியம், 2009). சிலம்பின் காரணமாகக் கொண்ட வரலாற்றைக் கூறுவதால் "சிலப்பதிகாரம்" என்ற பெயர் வந்தது (அருணாசலம், 2012). வரலாற்று இனவரைவியல் நோக்கில் சிலப்பதிகாரக் காப்பியத்தின் முதல் இயலில் ஆய்வு பின்னணி, ஆய்வு சிக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வு நன்மைகள், ஆய்வு எல்லை, ஆய்வு சான்றாதாரங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.2 ஆய்வு பின்னணி

ஐம்பெருங்காப்பியங்களில் அதிக அளவில் மக்கள் கொண்ட சமயங்கள், வழிபாட்டுத் தெய்வங்கள், வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள் இடம்பெற்றுள்ளது. சிலப்பதிகாரக் காப்பியத்தில் பரவலாக மக்கள் கொண்டுள்ள சமயங்கள், வழிபாடு செய்த தெய்வங்கள், நம்பிக்கைகள் காணப்பெருவதைக் காணலாம் (வேலுசுவாமி, 1989). தமிழ் இலக்கியம் என்று எடுத்துக் கொண்டால் அது கருப்பொருளுக்கு மட்டும் முக்கியம் கொடுக்காமல் இயற்கை, நன்னெறிப்பண்புகள், பண்டையக் கால வாழ்வியல், மக்களின் நம்பிக்கைகள் போன்ற கூறுகளில் அமைந்திருக்கும் (சுப்பிரமணியன், 2008). மேலும், இலக்கியங்கள் சமயக் கூறுகளையும் தழுவி அமையப்பெற்றிருப்பதனையும் அறிய இயலும் (அருள்தாசு, 1988). சமயம் மனிதர்களால் தோற்றவிக்கப் பட்ட பிறகு அந்தச் சமயத்திற்கு பொருந்திய 05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi தெய்வங்களை மக்கள் வழிபாடு செய்வதனைப் பல தமிழ் இலக்கியங்கள் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது (இராமன், 2001).

மனிதர்கள் தெய்வங்களை வழிபட தொடங்கும் முன் இயற்கை வழிபாடு செய்துள்ளனர். இயற்கை அன்னையின் சீற்றத்திலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள அக்கால மனிதர்கள் இயற்கையுடன் ஒன்றியிருந்து வாழ்ந்தனர். கடுமையான மழை, இடி, புயல், வறட்சி, குளிர், அதிக வெப்பம், கொடிய மிருகம் போன்ற இயற்கை விளைவிக்கும் கெடுதல்களைத் தவிர்க்க அக்கால மக்கள் இயற்கையை அதிக அளவில் வழிபட்டனர் (பரமசிவம், 2005).

இயற்கை தெய்வங்களை அடுத்து மனிதர்கள் சிறு தெய்வங்களையும் வழிபாடு செய்ய ஆரம்பித்தார்கள். மனிதர்களாக வாழ்ந்த காலத்தில் ஆற்றிய

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


உதவிகள், சிந்தனைகள், வீரச் செயல்கள், தியாகம் போன்றவைகளை நினைவுக்கூறும் வகையில் இறந்த பின்னர் தெய்வங்களாக வழிபாடு செய்துள்ளனர். பெருந் தெய்வங்கள் வழிபாடு காட்டிலும் சிறு தெய்வங்கள் வழிபாடு பல வகைகளில் மாறுப்பட்டிருக்கும். மனிதர்கள் தங்களுக்கு ஏதாவதொரு சக்தி துணை இருக்க வேண்டும் என்ற நோக்கில் இயற்கை தெய்வம், பெருந் தெய்வம், சிறு தெய்வத்தின் வழிபாட்டைத் தொன்று தொட்டு இன்றளவும் வழிபடுகின்றனர் (காவ்யா, 2011).

இதனைத் தொடர்ந்து சங்க காலத்தில் மக்கள் சமயத்தைத் தோற்றுவிக்காமல் தங்களுக்கு ஏற்ற தெய்வங்களையே அவர்கள் வழிபாடு செய்து வந்தனர். அவ்வாறு இருப்பின் சங்க கால மக்கள் ஐந்திணைக் கேற்ப தெய்வங்களை வழிபடுதலை அறிய முடிகின்றது. அவை மருத திணைக்கு இந்திரன், குறிஞ்சி திணைக்கு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

முருகன், பாலை திணைக்குக் கொற்றவை, முல்லை திணைக்குத் திருமால், இறுதியாக நெய்தல் திணைக்கு வருணனை அதிகமாக வழிபட்டு வந்தனர். சங்க காலத்தில் இந்திர என்ற தெய்வம் மக்களால் பிரசித்திப் பெற்றவர் எனலாம். (கந்தசாமி, 1995). சங்க காலத்திற்கு முற்பட்டு எழுந்த இதிகாச கதைகளில் தெய்வம் மனிதனாக அவதரித்ததை இராமயணம், மகாபாரதம் இதிகாசப் புராணங்களில் காணலாம். சங்க காலத்தில் மக்கள் வழிபாடு செய்த தெய்வங்கள் தற்போது சூழ்நிலையில் மக்கள் வழிபாடு செய்கின்றனர் (கந்தசாமி, 1995).

சங்க காலத்திற்கு அடுத்து எழுந்த காலவே சங்க மருவிய காலம். சங்க மருவிய காலத்தில் மக்களின் வாழ்க்கைச் சூழல் கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டு நீதி நிலைகுழைந்து போனது. இக்காலத்திற்குப் பின்னால் எழுந்த காலமே நீதி காலமாகும். மக்களுக்கு நீதி புகட்ட எழுந்த சமயங்களே சமணமும் பௌத்தமாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இக்காலத்திற்குத் தொடர்ந்து வந்த காலமே காப்பியக் காலம். இக்காலத்தில் எழுந்த சிலப்பதிகாரம் காப்பியமும் இந்த இரு சமயங்களைத் தழுவி நின்றது மட்டுமல்லாமல் பல தெய்வங்களைக் கூறும் காப்பியமாக அமைந்திருந்தது (ராம்பிரகாஷ், 1994). பௌத்த சமயம் அக்கால சூழலின் மக்களுக்கு நீதி நிலை நாட்ட வந்த சமயங்களாகத் தோன்றிற்று. சிலப்பதிகாரம் காப்பியம் முப்பெறும் உண்மைகளை உணர்த்துவதனால் இக்காப்பியம் ஒரு சமண á லக இருந்திருக்கக் கூடும் என்ற கருத்தும் நிலவுகின்றது. சிலப்பதிகாரக் காலத்து மக்கள் மற்ற சமயங்களைத் தழுவி நின்றும், பிற சமயங்களின் முக்கியத்துவத்தை அறிந்தும் வாழ்ந்துள்ளனர் (ராம்பிரகாஷ், 1994).

இதனைத் தொடர்ந்து, தமிழ் நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்த பௌத்த சமண சமயங்களை எதிர்த்து மக்களைத் திரட்டுவதற்குக் கலைநயத்துடன் கூடிய பக்திப் பாடல்கள் இசையுடன் நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் தோற்றுவிக்கப்பட்டது. மக்கள் சிவனையும் பெருமாளையும் வழிபாடு செய்திருந்தாலும் சமயங்களாகச் சங்க காலத்திலோ அதற்குப் பின் எழுந்த காப்பியக் காலத்திலோ காண முடியவில்லை (காவ்யா, 2011). சமண பௌத்த சமயம் தலை தூக்கி இருந்த காரணத்தால் நாயன்மார்களும் ஆழ்வார்களும் சைவ சமயத்தையும் வைணவ சமயத்தையும் முன்நிறுத்தினர். சிலப்பதிகாரக் காலத்து மக்கள் பல தெய்வங்களை வழிபட்டிருந்தாலும் சமயமாக அக்காலத்தில் கருதியதில்லை. தெய்வங்களை வழிபட்ட பின்னரே சமயத்தைப் பின்னாளில் பின்பற்றினர். நாயன்மார்கள் ஆழ்வார்கள் வந்த பின்னரே மிக ஆழமாகப் பின்பற்றினார்கள். நாயன்மார்கள் தெய்வங்களைப் பூ, நீர், பாடல் வைத்து வழிபட வேண்டும் என்று கூறும் கருத்தினை இளங்கோவடிகள் சிலப்பதிகாரக் காப்பியத்தில் முன்னாளிலே குறிப்பிட்டுள்ளார். நாயன்மார்கள் தெய்வங்களுக்கு வைத்து வழிபடும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


நிவேதனப் பொருட்கள் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்து மக்கள் தெய்வங்களுக்குச் செலுத்தும் பொருட்கள் மாறுப்பட்டிருப்பதனையும் காணலாம். சிலப்பதிகார மக்கள் சில தெய்வங்களுக்குப் பலியிடுதலையும் முக்கியமாகக் கருதுகின்றனர் (காவ்யா, 2011).

இந்து மதம் பல சமயங்களைத் தழுவிய ஒரு தனித்துவம் படைத்த மதமாக இன்றளவும் அறியப்படுகின்றது. இந்து மதம் சமயத்தோடும், பின் சமயம் இறை வழிபாட்டோடும் தொடர்புடையது. இக்கருத்தினை இலக்கியங்களில் மிக ஆழமாக அறியப்படுகின்றது. அவ்வகையில் அக்கால புலவர்கள் தங்களின் பாடல்களிலோ அல்லது கவிதைகளிலும் கடவுள் வாழ்த்தாக இறை வணக்கத்தை முன்னுறுத்தி தங்களின் படைப்பை உருவாக்குவர். இக்கூற்றினைப் பரிபாடல், கலித்தொகை போன்ற இலக்கியங்களில் காணலாம். இருப்பினும் சில இலக்கியங்களில் கடவுள் வாழ்த்தாக இயற்கையைப் புலவர்கள் முதன்மையாகப் பாடியதுண்டு (அங்கமுத்து, 2004). இப்படி மாறுப்பட்ட கருத்து குறிப்பாக இயற்கையை முதற் தெய்வமாகவும், தெய்வங்களுக்கு அடுத்து இயற்கையையும் புலவர்கள் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது. மனிதர்கள் தெய்வங்களை வழிபாடு செய்வது மட்டுமின்றி இயற்கையின் மீதும் அக்கறை கொள்ள வேண்டும் என்பதனைச் சில புலவர்களின் கூற்றாக அமையப்பெருவதை அறிய இயலுகிறது. தெய்வம் மனிதன் செய்யும் தவறுகளை இயற்கையின் மூலம் தண்டனை வழங்கப்படுகின்றது என்ற கருத்தும் நிலவுகின்றது. ஆகவே, எங்கும் நிறைந்த தெய்வம் உருவம் பெற்று இயற்கையின் மூலமும் அறியப்படுகின்றது என்று அக்காலப் பழங்குடி மக்கள் நம்பி வாழ்ந்து வந்தனர் (அங்கமுத்து, 2004).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தமிழர்கள் தெய்வங்களை வழிபாடு செய்ய சமயச் சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். சடங்கு என்பது மக்கள் அவர்களின் காலம், இடம், சூழல், தேவை, நோக்கம் போன்ற காரணிகளை முன்வைத்து அவற்றின் தன்மைகளுக்கு ஏற்ப அதனை வேறுபடுத்தி நிகழ்த்தி இருப்பதனை இலக்கியங்களின் மூலம் அறியலாம் (காவ்யா, 2011). சடங்குகள் வெவ்வேறாக இருந்தாலும் அதன் நம்பிக்கை தெய்வங்களை அடிப்படையாக இருப்பதனையும் காணலாம். மேலும், சடங்குகளின் ஏற்ப மக்களின் நம்பிக்கையையும் மேற்குறிப்பிட்ட காலம், இடம், சூழல், தேவை, நோக்கம் அடிப்படையில் மாறுப்படுதலையும் அறியலாம். மக்கள் திணைக்கேற்ப தெய்வங்களை வழிபட்டது போன்று தாங்கள் இருக்கும் சூழல், வசிப்பிடம், நம்பிக்கைக்கு ஏற்றவாறும் தெய்வங்களையும், அந்தத் தெய்வங்களுக்கு ஏற்ற சமயத்தையும் பின்பற்றி வாழ்ந்துள்ளனர் (காவ்யா, 2011).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆகவே, மானிடவியல் கூறும் கோட்பாட்டின் படி மனிதர்கள் பல தெய்வங்களை வழிபாடு செய்தும், அவர்களின் நம்பிக்கையும் சடங்குகளும் அக்காலத்தைப் பின்பற்றி இருந்தாலும் காலத்திற்கேற்றவாறும் ஒருமைபட்டும் இருப்பதனைக் காணலாம். (பக்தவத்சல பாரதி, 2011). இக்கருத்தினை, இலக்கியங்களில் காட்டும் மக்களின் தெய்வ வழிபாடும், மக்கள் அக்காலத்திலும் அதன் தொடர்சியாக வழிபட்ட தெய்வங்களையும் காணலாம். தெய்வம் பல கோணங்களில் காட்டப்பட்டாலும் மக்களின் நம்பிக்கை ஏதோ ஒரு சக்தி இயங்கி கொண்டிருக்கின்றது என்று நம்புகின்றனர் (பக்தவத்சல பாரதி, 2011). சில சமயங்களும் தெய்வங்களும் அக்காலத்தில் தோன்றினாலும் இக்காலத்தில் மாறுப்பாடு அடைந்துள்ளதையும் அறிய இயலுகிறது. தெய்வ நம்பிக்கை முக்கியம் என்பதனை இலக்கியங்கள் உணர்த்துகின்றது. மகாபாரதமும் இராமயணமும் ஒரு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சில தெய்வங்களையும் அதன் சமயங்களைக் காட்டினாலும் பல தெய்வங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், விழாக்கள், சமயங்கள் ஒட்டு மொத்தமாக எடுத்துக் கூறும் பெறுமை சிலப்பதிகாரக் காப்பியத்தையே சாறும் (அருள்தாசு, 1997).

கோவலன், கண்ணகி, பாண்டியமன்னன் போன்ற கதாமாந்தர்களின் மூலம் சிலப்பதிகாரக் காப்பியத்தின் உண்மையை உணர்த்தினாலும் மூன்று காண்டங்களிலும் பக்தி வீசும் விதமாகவே அமையப்பெற்றுள்ளது (வரதராசன், 1973). மனித வாழ்விற்குத் தெய்வங்களின் நம்பிக்கை எவ்வளவு முக்கியத்துவம் என்பதனை இளங்கோ மக்களுக்கு உணர்த்தும் காப்பியமாக அமையப்பெறுகின்றது (லேனா தமிழ்வாணன், 1992). ஆகவே, காப்பியக் காலத்தில் முதற் காப்பியமாக விளங்கும் சிலப்பதிகாரத்தில் பழைய மரபின் விதமாகத் தமிழ் மக்கள் வழிபட்ட தெய்வங்கள், வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள், விழாக்கள், சமயங்கள் மானிட நோக்கில் இளங்கோவடிகள் மிக அழகாகவும் ஆழமாகவும் எடுத்துக் காட்டியுள்ளார் (ஆனந்தன், 2013). பழைய மரபுகளைத் தற்கால மக்கள் மறந்துவிடக் கூடாது என்ற நோக்கில் இளங்கோ அப்போதே சிலப்பதிகாரக் காப்பியம் தமிழர்களின் ஒரு வரலாற்றுக் காப்பியம் எனத் தெளிவுப்படுத்தியுள்ளார் (பக்தவத்சல பாரதி, 2011). வரலாற்றின் மூலம் ஒரு சமூகத்தின் வளர்ச்சிப் படியினை மிகவும் துல்லியமாக அறிய இயலும் (பக்தவத்சல பாரதி, 2011). இந்த ஆய்வு சிலப்பதிகாரக் காப்பியத்தின் மூலம் மக்கள் கொண்டுள்ள தெய்வச் சிந்தனையை வரலாற்றின் மூலம் வெளிக்கொணருகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.3 ஆய்வு சிக்கல்

சிலப்பதிகாரக் காப்பியம் சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய காப்பியமாகும் (லேனா தமிழ்வாணன், 1992). மிகவும் தொன்மையான காப்பியம் என்பதனால் தற்கால மானுடவியல் கூறுகளுடன் ஒன்றி வருகிறாத என்பதில் சற்றுச் சிரமமாக அமைந்தது. காரணம் தற்போது உள்ள மானுடவியல் முக்கிய ஒன்றான இனவரைவியல் ஒரு நவீன ஒன்றாகும் (பக்தவத்சல பாரதி, 2011). இந்த இனவரைவியல் சிந்தனை மிக பழங்காலத்தில் தோன்றினாலும் இதன் பயன்பாடு 19-ஆம் á ற்றாண்டில் பிரசித்தி பெற்றது. மானிடவியல் ஆராய்ச்சி ஆரம்பக் காலத்தில் ஆங்கிலேயர்கள் ஆய்வுகளில் காணலாம். மானிடவியல் என்பது மனிதர்களைப் பற்றிய ஆய்வு என்பதனால் மேலை நாட்டார் கோட்பாடுகளைக் கொண்டு சிலப்பதிகாரக் காலத்து மக்களை ஆராய்வது சற்று வேறுபட்ட வகையில் அமைந்துள்ளது (பக்தவத்சல பாரதி, 2011).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தமிழில் பக்தவத்சல பாரதி மானிடவியல் கோட்பாட்டின் அடிப்படையில் இலக்கியங்களை ஆராய்ந்துள்ளார். அவரின் மானிடவியல் சிந்தனையைத் தமிழர்கள் கொண்டுள்ள நம்பிக்கை, தொழில், திருமண முறைகள், கொண்டாடும் விழாக்கள் போன்ற விவரங்களுடன் தெளிவாக விளக்கிக்காட்டி இருந்தார். அவர் கொடுத்திருந்த இனவரைவியல் கூறுகள் எவ்வகையாக ஓர் இனத்தை ஆராய முடியும் என்பதாகும் (பக்தவத்சல பாரதி, 2011). அந்த இனவரைவியல் கூறுகள் மேற்கொள்ளும் ஆய்வோடு மிகவும் பொருந்தி இருந்தது. சிலப்பதிகார மக்கள் வணங்கிய தெய்வங்கள், நம்பிக்கைகள், விழாக்கள், வழிபாட்டு முறைகள் இனவரைவியல் கூறுகளோடு பொருந்தி இருந்தது. ஆகவே, அந்தக் கூறுகளை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அணுகி இனவரைவியல் கோட்பாடாகச் சிலப்பதிகாரக் காப்பியத்தோடு தொடர்புப் படுத்தி இந்த ஆய்வை மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிலப்பதிகாரம் ஒரு சிறப்பை மட்டும் தழுவி நில்லாமல் பல சிறப்புகளையும் மனித வாழ்வியல் கூறுகளை மிக ஆழமாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளது. மனிதன் வாழ்வியல் சூழல் அவர்கள் கொண்டுள்ள சமயம், நம்பிக்கை, வழிபாடு இன்னும் விழாக்கள் எனக் குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒரு கால சூழலில் உருவெடுக்கின்றது (வேங்கடவன், 1998). இனவரைவியல் நோக்கில் இந்நோக்கத்தை மூன்று காலங்களிலும் நிகழ்ந்து பின் சில அவ்வாறே ஏற்றுக்கொள்ளபடுவது மட்டுமல்லாமல் சில புதிய மாற்றத்திற்கு உட்படுத்தப்படுகின்றது. இம்மாற்றத்திற்கான அடிப்படைக் காரணம் மனிதனின் சிந்தனை வளர்ச்சியும், வாழும் சூழல், முன்னோர்களின் பழக்க வழக்கங்களின் கொண்டுள்ள பெரிய மாற்றங்களே எனக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கூறலாம். மேலும், பொருள் சார்ந்த உலகம் என்பதனாலும் இக்கால மக்கள் பழமையை மறந்தும், இலக்கியங்களில் மீது கொண்டுள்ள நாட்டமும் குறைந்துள்ளது. சமயம், நம்பிக்கை, வழிபாடு, விழாக்களிலும் இன்று ஒரு தொய்வுநிலையும் அடைந்துள்ளது எனலாம். இந்நிலை இந்து மதத்தைச் சீர்க்குழைய வைக்க ஓர் அஸ்திவாரமாக அமைகின்றது (கந்தசாமி, 2001).

மனிதன் தெய்வங்களை உணரும் முன் இயற்கையோடுதான் அதிகளவில் தன் வாழ்வை முடித்துள்ளான். ஆதிகால மனிதர்கள் காடுகளில் வாழ்ந்த பின்னர், ஊர்ந்து ஒர் இடத்தை அடைந்தப் பின் தனக்கேற்ற வகையில் ஊரை அமைத்துக் கொண்டனர். அதற்குப் பின் ஊரை விட்டு நகர்ந்து நகரத்தில் வாழக் கற்றுக் கொண்டனர் (இராமன், 2001). அடிப்படையில் மனிதர்களின் இருப்பிடம் இயற்கையைச் சார்ந்ததாக அமையப்பெற்றது எனக் கூறலாம். இயற்கையோடு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வாழ்ந்த மனிதர்கள் இயற்கை தரும் அச்சுருத்தலைப் பயத்தோடு அணுகிய பின் இயற்கையைத் தொழ ஆரம்பித்தார்கள். கல், கடல், மரம், மிருகங்கள் போன்றவைகளை மனிதன் வழிபட்டு ஆரோக்கியத்தையும் நாகரீகத்தையும் படிப்படியாக வளர்த்துக் கொண்டான் (நல்லசிவம், 2008). தற்கால மனிதர்கள் இயற்கையோடு ஒன்றி வாழாமல் இயற்கைக்குப் புறப்பான காரியங்களைத் தங்களின் சுயநலத்திற்காகச் செய்ய முற்படுகின்றனர். இதனைக் காடுகளை அழித்தல், நீர் வளங்களான கடல், ஆறு, ஏரி போன்றவைகளுக்கு நீர் தூய்மைகேட்டையும் ஏற்படுத்துகின்றான் (காண்க செய்தி 1 & 2 - பக் - 254). இதனால் மனிதர்களுக்கு இயற்கையிடமிருந்து பேரிடர்கள் அதிகளவில் வருவதனை உலகெங்கும் ஆங்காங்கே காண இயலுகிறது. வெள்ளம், வறட்சி, சூறாவளி, நோய் ஆகியவற்றில் துன்பப்படுகின்றான் (காண்க செய்தி 3 & 4 - பக் - 255). ஆதிகாலத்தில் மனிதர்கள் இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்ந்ததனால் இயற்கை பேரிடர்களை முன்னே அறியும் ஆற்றல் இருந்தது (இராமன், 2001).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இயற்கையைக் கட்டுப்படுத்தும் மாபெரும் சக்தி ஒன்று இருப்பதனைப் பிறகு உணர ஆராம்பித்தான். இந்த உலக அனைத்து இயக்கத்திற்கும் ஒரு சக்தி துணையிருப்பதனையும் நம்ப தொடங்கினான். அந்தச் சக்தியைக் தெய்வம் என்று நம்பத் தொடங்கினான். தெய்வம் இயற்கையை ஒரு கருவியாகப் பயன்படுத்தி மனிதர்கள் வாழும் காலத்தில் செய்யும் தவறுகளை இயற்கையின் மூலம் தண்டனையைக் கொடுக்கின்றது என்பதனை அக்கால மனிதர்கள் உணர்ந்து தெய்வங்களை வணங்கியுள்ளனர் (James N. Anderson, 2018). அக்கால மனிதர்கள் தங்கள் வாழும் இடத்திற்கு ஏற்ப ஏதாவதொரு சக்தியை வழிபட ஆராம்பித்துள்ளனர். அந்தச் சக்தி பின்னாளில் தெய்வம் வடிவம் எடுத்து இன்றளவும் மக்களால் வழிபாடு செய்யப்படுகின்றது. “ஒன்றே குளம், ஒருவனே

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தெய்வம்", என்ற திருமூலரின் கூற்றுப்படி மனிதக் குலத்தைக் காக்கும் சக்தி அனைத்து ஜீவராசிகளுக்கும் ஒன்றுதான். தங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு சக்திக்கு வடிவம் கொடுத்துத் தெய்வங்களின் மீது பக்தி கொண்டு அக்கால மனிதர்கள் தெய்வ நம்பிக்கை நிறைந்து கோயில், குளம், சாஸ்திரம், வேதங்கள் போன்றவைகளில் அதிக ஈடுபாடு கொண்டவர்களாக இருந்தனர் (தெய்வச்சிலை, 2010). தற்கால மனிதர்கள் சற்று இந்நிலையில் இருந்து மாறி தங்களின் காரியங்கள் வெற்றி அடைய வேண்டும் என்ற நோக்கத்திற்காகத் தெய்வங்களைத் நம்பத் தொடங்குகின்றனர். சிலர் கோயில்களில் ஏதாவது ஒரு சிறப்பு நாட்களில் மட்டும் செல்வதனை இன்றளவும் காண இயலுகிறது. மேலும், கோவிலுக்குச் செல்லும் போது தூய மனது, பக்தி, சரியான உடைகள், புலால் உணவைத் தவிர்த்துக் கோவிலுக்குச் செல்ல வேண்டும் என்ற அடிப்படை விதிகள் தெரியாமல் கோவில்களுக்குச் செல்கின்றனர் (காண்க செய்தி 5 - பக் - 256).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தெய்வங்களைத் தங்களின் விருப்பம் போல் வழிபட தொடங்கிய மனிதர்கள் பின்னாளில் மதங்களை உருவாக்கினர். மதங்கள் உருவானதன் நோக்கவே மக்களை நல்வழி படுத்தி என்றும் மக்களைத் தெய்வ சிந்தனையுடனும் நல்ல செயல் எண்ணத்துடனும் வாழ வேண்டும் என்பதற்கு. இந்த மதங்கள் மனிதனுக்குப் பல அறப்போதனைகளைப் கற்றுக் கொடுத்தது. மக்கள் தங்களின் தெய்வம் சார்ந்த மதங்களைப் பின்பற்றுதலில் மாறுப்பாடு கண்டிருந்தாலும் மதக்கருத்துகள் அனைத்து மனிதர்கள் தங்கள் வாழ்வில் ஏற்றுக் கொள்ளும் வண்ணமாகவே அமைந்தது (கலியபெருமாள், 2003). இதில் மிகவும் பழைய மதமாக இந்து மதம் இருந்தது. இந்து மதம் பல தத்துவங்கள் நிறைந்தது மட்டுமின்றி அதற்குத் துணைக் கொடுக்கும் வகையில் வேத á ல்கள், புராணங்கள், இதிகாசங்கள், கீதை போன்ற á ல்கள் அமையப்பெற்றது (கலியபெருமாள், 2003). இந்து மதத்தின் காலக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கட்டத்தில் சமணமும் பௌத்த மதமும் தோன்றியது. இவ்விரு மதங்களும் மக்களுக்குப் பல நல்ல நெறிகளைப் புகட்டியது எனலாம். இந்த மதங்களுக்கு அப்பால் இஸ்லாமியமும், கிருஸ்துவ மதமும் தோன்றி மக்களுக்கு வாழ்க்கை நெறிப் பாடங்களை அதிகளவில் கற்றுக்கொடுத்தது (கலியபெருமாள், 2003). தாங்கள் விரும்பி வழிபடும் தெய்வங்களுக்கு ஏற்றவாறு மதங்களை ஏற்படுத்தி வாழ்ந்த மனிதர்கள் இதற்கு முன் இருந்த காலத்திலும் சரி, தற்காலத்திலும் அதிகளவில் மத சண்டைகளில் ஈடுப்படுகின்றனர். இதனால் பல உயிர்கள் கொல்லப்படுகின்றது. இந்த உலகத்தை இயக்கக் கூடியச் சக்தி ஒன்று என்பதனையும் அது மக்களின் நம்பிக்கைக்கு ஏற்றார் போல மாறுப்படுகின்றது என்பதனை ஓரளவு புரிந்து கொண்ட மனிதர்கள் மதங்களில் மீது கொண்ட தீவிர வெறியால் பிற மதத்தினரிடம் சண்டை போடுகின்றனர் (காண்க செய்தி 6 - பக் - 256 & 7- பக் - 257).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதனைத் தொடர்ந்து, இயற்கை தெய்வங்களையும் பெருந்தெய்வங்களான சிவன், திருமால், முருகன், கணபதி, சக்தி போன்ற தெய்வங்களை வழிபாடு செய்த மனிதர்கள் அத்தெய்வங்களுக்கு ஈடாக சிறுதெய்வங்களை வழிபாடு செய்வதனை இன்றளவும் காண இயலுகிறது. பெருந்தெய்வங்களுக்கும் சிறுதெய்வங்களுக்கும் உள்ள வேற்றுமை என்னவென்றால் பெருந்தெய்வங்கள் ஆகம சாஸ்த்திரப்படி மந்திரங்களும் வழிபாட்டு முறைகளும் அமையப்பெற்றிருக்கும் (கலியபெருமாள், 2003). சிறுதெய்வங்களைக் காட்டிலும் பெரிய தெய்வங்கள் அதிக சக்தி வாய்ந்தது என்பதனைப் புராணங்கள் இதிகாசங்களில் காணலாம். சிறுதெய்வங்கள் பொதுவாக ஊர் எல்லை காவல் தெய்வங்களாகவும், தேவதைகள், கன்னிகள், பூதங்கள் போன்ற வகைகளில் மக்கள் வழிபட்டு வந்திருப்பர். சிறுதெய்வங்களுக்குச் சாஸ்த்திரப்படி மந்திரங்களோ வழிபாட்டு முறைகளோ கிடையாது. ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அல்லது இடத்திலோ இவ்வகையான தெய்வங்கள் ஆதிக்கம் அடைந்து மக்களுக்கு ஏதாவது ரூபத்தில் நன்மையைக் கொடுப்பதனால் மக்கள் தெய்வங்களாக வழிபாடு செய்து வந்தனர் (கலியபெருமாள், 2003). சிறுதெய்வங்களைச் சாந்தி அடைய செய்ய ஆண்டு தோறும் அத்தெய்வங்களுக்கு நர பலி கொடுத்தும், மது போன்றவைகளைப் படைத்தும் சிறுதெய்வங்களை வழிபாடு செய்வதனை இன்றளவும் காண இயலுகிறது (Uma Marina Vesci, 1992).

இவ்வகை தெய்வங்கள் இருந்தாலும் தற்கால சூழலில் மக்களுக்கு எது பெருந்தெய்வம் சிறுந்தெய்வம் என்று அறியாமல் இருக்கின்றனர் (Pandit Dasa, 2012). சிலர் அறியாமையால் இவ்வுலக படைப்பிற்கு அனைத்தும் தாங்கள் வழிபடும் சிறுந்தெய்வங்கள் எனக் கருதி அதிக முக்கியத்துவம் வழங்கி அதிகமாகப் பணத்தைக் கண் மூடித்தனமாகச் செலவிடுவது மட்டுமின்றி மாமிசத்தைப்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

படையலிடுகின்றனர். மலேசியா நாட்டில் பெருந்தெய்வங்களைக் காட்டிலும் சிறுதெய்வங்களையே மக்கள் அதிகளவில் வழிபடுகின்றனர் (தேமொழி, 2013). மக்களால் விரும்பி நடத்தப்படும் விழாக்கள் அனைத்தும் மகிழ்வை அடிப்படையாகக் கொண்டது எனக் கூறலாம். கொண்டாடப்படும் விழாக்கள் மக்களுக்கு ஒரு மன மகிழ்ச்சியை எற்படுத்துவது மட்டுமின்றி ஒரு நல்ல பொழுது போக்காகவும், நல்லுறவை ஏற்படுத்தும் வகையிலும் அமையப்பெற்றிருக்கும். மக்களிடையே புரிந்துணர்வு, ஒத்துழைப்பு, விட்டுக் கொடுத்தல், மரியாதை போன்ற நற்பண்புகள் இவ்விழாவின் போது தான் அதிகளவில் மக்கள் மனதில் விதைக்கலாம் (காண்க செய்தி 8 - பக் - 257). தமிழர்களின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் விளக்குவனவாக இவ்விழாக்கள் அமைகின்றன. இன்றளவும் தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் விழா எடுப்பதனைக் காணலாம் (தட்சிணாமூர்த்தி, 1994).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இந்தப் பரபரப்பான உலகில் பணத்தை முக்கியம் என்று கருதும் மக்களிடையே இந்த விழாக்களைக் கொண்டாடும் பழக்கங்கள் சற்றுக் குறைந்து கொண்டு வருதலையும் அதன் தேவை முக்கியத்துவத்தை அறியாது இருத்தலும் மிகப் பரவலாகக் காண முடிகின்றது. வெறும் சடங்கிற்காக விழாக்களைக் கொண்டாடும் மக்கள் பின்னாளில் வரும் சந்ததியினருக்கு அதன் அவசியத்தைப் புரிய வைக்க முன்வருவதில்லை. மேலும், கோயில்களில் நடத்தும் திருவிழாக்களில் இன்றளவும் மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று தெய்வத்தை வழிபட்டாலும் சமயத்திற்குப் புரண்பட்ட காரியங்களிலே ஈடுப்படுகின்றனர். கொலை, கொள்ளை, மது அருந்துதல், கூத்தாட்டம் போன்ற செயல்களில் ஈடுப்பட்டு மதத்திற்கு மாசு ஏற்படுத்துகின்றனர் (காண்க செய்தி 9 & 10 - பக் - 258, 11 & 12 - பக் - 258 & 13 - பக் - 260). ஒரு நெறியான வாழ்க்கையையும் அறத்தைப் பின்பற்றி வாழும் வாழ்வானது மனிதனும் தெய்வம் ஆகலாம் என்பது தின்னம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொன்றுத்தொட்டு பல நம்பிக்கைகள் இன்றளவும் மக்களிடயே இருந்து வந்துள்ளதை அறிய இயலும். கொண்டிருக்கும் நம்பிக்கைகள் பெருமளவில் அவர்களின் மனதைச் சார்ந்ததாகவும் அமையப்பெற்றிறுக்கும். தங்களுக்கு ஏதாவது இடர்கள் வரும் என்றால் அதனை மனதால் உணர்ந்த பின் அந்த இடர்கள் நன்மைகளையே கொண்டு வரும் என்பதனை முழுமையாக நம்புவார்கள். பொதுவாக உளவியல் அடிப்படையில் மனிதன் எண்ணும் எண்ணம் தான் பின்னாளில் அது செயலாக உருவாக்கம் பெறுகின்றது என்பதனைத் தெளிவுப்படுத்துகின்றது (ரோண்டா பைர்ன், 2011). அக்கால மக்கள் அவர்கள் வணங்கும் தெய்வங்கள் கைவிடாது என்ற நம்பிக்கையை மிக ஆழமாகக் கொண்டிருப்பார்கள். மனிதர்கள் வாழ்க்கையில் நிகழும் பிரச்சனைகள் தீரவும், அவர்களின் வேண்டுதல்கள் நிறைவேறவும் தெய்வத்தை வணங்கினால் அந்தச்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


செயல் உடனடியாக நிறைவேறும் என்கிற நம்பிக்கை இருந்து வந்துள்ளது (கலியபெருமாள், 2013). மேலும், சோதிட நம்பிக்கை, கனவு போன்றவைகளை நம்பியிருந்தாலும் அவைகள் தெய்வம் அருளால் நிகழ்த்தப்படுகின்றது என்ற நம்பிக்கை கொண்டவர்களாக இருந்துள்ளனர் (மகாலட்சுமி, 1996). தெய்வங்களிடம் இருந்த நம்பிக்கை சற்றுக் குறைந்து இன்று மூட நம்பிக்கைகள் மக்களை ஆட்டிப் படைக்கின்றது. இந்த மூட நம்பிக்கையில் தவழும் மனிதர்கள் பல இன்னல்களுக்குத் தள்ளப்படுகின்றார். மூடநம்பிக்கையால் மனிதர்கள் போலி சாமியார்கள் பக்கம் அதிகளவில் செல்வது மட்டுமின்றி தங்கள் பணத்தையும் தேவையில்லாமல் செலவிட்டும் மதத்திற்குப் புறப்பான நடவடிக்கைகளில் ஈடுப்படுவது மட்டுமின்றி தினமும் வாழ்க்கையைப் பயத்தால் வாழ்ந்து வருகின்றனர் (காண்க செய்தி 14 - பக் - 260).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மலேசியா நாட்டில் பிற இனத்தவர்கள் இந்துக்களின் தெய்வங்களையும் வழிபாட்டினையும் ஏளனம் செய்யும் முறையில் பேசுகின்றனர். இதற்குக் காரணம் அவர்களுக்கு முழுமையான இந்துக்களின் தெய்வ வழிபாட்டு முறை தெரியாமல் இருப்பதுத்தான். மேலும், மலேசியாவில் வாழும் இந்துக்களும் நம் வழிபாட்டு முறையைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் பல வன்முறை செயல்களைக் கோயில்கலில் நிகழ்த்துவதனால் பிற இனத்தவர்கள் ஏளனம் செய்யும் அளவிற்குத் தள்ளப்படுகின்றோம். மிக கொடுரமான முறையில் தெய்வ கோலங்களின் வெறியாடுதல், வன்முறை கும்பல்களின் சின்னங்களைக் காவடிகளில் பயன்படுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடுவதனால் பிற இனத்தவர்கள் நமது சமயத்தைக் கேளி செய்கின்றனர் (காண்க செய்தி 15 - பக் - 261).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தொன்றுத் தொட்டு வந்த தெய்வங்களின் வழிபாடு, மக்களின் நம்பிக்கை, கொண்டாடும் விழாக்கள், இயற்கையிடம் ஒன்றி வாழுதல் போன்ற வழிமுறைகளை அக்கால மக்களைப் போல இக்கால மக்கள் பின்பற்றினால் தமிழின் சிறப்பை மட்டும் காக்கப்படுவது மட்டுமின்றி இந்து மதத்தையும் மானிடவியலையும் முன் நிறுத்தும் மானிடனாக இப்புவியில் வாழலாம் (சிவசுப்பிரமணியன், 1988). மேற்குறிப்பிட்ட பிரச்சனைகளைத் தற்கால மனிதர்கள் கொண்டுள்ளதால் இதனை முன்நிருத்தியே இளங்கோவடிகள் சிலப்பதிகாரக் காப்பியத்தின் மூலம் தமிழர்களின் தெய்வம் தொடர்புடைய வாழ்வியல் கூறுகளைத் தெளிவுப் படுத்தியுள்ளார். அக்கால மனிதர் இயற்கைக்கு முன்னுறிமைக் கொடுத்தது பற்றியும், பெருந்தெய்வங்கள் சிறுதெய்வங்கள் எவ்வாறு மக்களால் வழிபாடு செய்யப்பட்டதனையும் மனிதனும் தெய்வம் ஆகலாம் என்ற கருத்தினை அழகாகக் கூறியுள்ளார். மேலும், மனிதன் கொண்டிருக்கும் நம்பிக்கை ஆழமாகவும் தெய்வங்களிடம் முழுமையாக அந்த நம்பிக்கை அமைதல் அவசியம் என்பதனை எடுத்துக்காட்டுகின்றார். விழாக்கள், மதங்கள், சமயங்கள் என்பன மனிதர்களை நல்வழிப் படுத்துதலையும் சிலப்பதிகாரக் காப்பியம் முழுவதும் ஆங்காங்கே இளங்கோவடிகள் காட்டியுள்ளார். ஆகவே, இவ்வாய்வு மனித வாழ்வின் நெறிகளைச் செம்மைப் படுத்துவது மட்டுமல்லாமல் பக்தி உலகுக்குப் பெருந்துணையாக அமைவது மட்டுமின்றி மனிதனும் தெய்வம் ஆகலாம் என்ற கருத்தினை ஆணித்தரமாகச் சிலப்பதிகாரம் சுட்டிக் காட்டியுள்ளது, மனிதன் பிறந்தால் மட்டும் முக்கியம் அல்ல என்பதனை ஒதுக்கி, நெறியான வாழ்க்கை தெய்வ நிலைக்குக் கொண்டு செல்லும் என்பதனை இக்காப்பியம் அஃது கொண்டுள்ள வரலாற்றுக் கூறுகளோடு உணர்த்துகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.4 ஆய்வு நோக்கம்

சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள தெய்வங்கள், வழிபாட்டு முறைகள், நம்பிக்கை, விழாக்கள் ஆகியன தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகள் ஆகும். இவற்றை ஒருங்கிணைத்து, ஒரே நோக்கமாகக் கொண்டு ஆராயலாம். ஆனால் ஒவ்வொரு கூறுகளையும் தனித்தனியாக ஆராயும் பொழுது முழுமையான நோக்கத்தைக் கண்டறியலாம். தமிழ்ச் சமூகப் பண்பாட்டுக் கூறுகளைச் சிலப்பதிகாரத்தில் கண்டறியும் வகையில் தெய்வங்கள், வழிபாட்டு முறைகள், சமயம், விழாக்கள் ஆகியவற்றின்வழி ஆராய்வது மட்டுமின்றி அக்கூறுகளை மலேசியா சமூகத்தோடு ஆராய்வது இந்த ஆய்வின் நோக்கமாகும்.

அ) சிலப்பதிகாரக் காப்பியத்தில் மக்கள் வழிபட்ட தெய்வங்களைக் கண்டறிதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆ) சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள தமிழரின் வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள், சமயங்கள், விழாக்களைக் கண்டறிதல்.

இ) சிலப்பதிகார இனவரைவியல் கூறுகளை மலேசியா இந்தியச் சமூகத்தோடு ஆராய்தல்.

## 1.5 ஆய்வு வினா

சிலப்பதிகாரக் காப்பியத்தில் இளங்கோவடிகள் அக்காலச் சூழலில் மக்கள் வழிபட்ட தெய்வங்கள், வழிபாட்டு முறைகள், கொண்டுள்ள சமயங்களும் விழாக்களும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஆகியவற்றை மானுடவியல் நோக்கில் ஆராய்தல் ஆகும். ஆகவே, மேற்குறிப்பிட்ட நோக்கங்களில் அடிப்படையில் இந்த ஆய்வு கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆய்வு வினாக்களுக்கு விடை அளிக்கும் என நம்பப்படுகின்றது. இந்த ஆய்வு வினாவாவது,

அ) சிலப்பதிகாரக் காப்பியத்தில் கூறப்பட்டுள்ள தெய்வங்கள் யாவை?

ஆ) சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள தமிழரின் வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள், சமயங்கள், விழாக்கள் ஆகியன எங்ஙனம் அமைந்துள்ளன?

இ) சிலப்பதிகார இனவரைவியல் கூறுகள் மலேசியா இந்தியச் சமூகத்தோடு எவ்வகையில் அமைந்துள்ளன?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.6 ஆய்வு நன்மைகள்

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்", என்ற பழமொழிக்கு ஏற்ப இப்புவியில் வாழும் மனிதர்கள் தாங்கள் மேற்கொள்ளும் அனைத்துக் காரியங்களைத் தெய்வ நம்பிக்கை கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இக்கருத்தினை மேலும் வலு சேர்க்க தமிழ் இலக்கியங்கள் பெறும் பங்காற்றுகின்றது. புராண காலத்தில் தெய்வம் மனிதனாக அவதரித்து மக்கள் வாழ்வியல் நெறிகளை இவ்வுலகுக்குப் பெருமை படுத்திக் காட்டியது. இதனை இராமாயணம், மகாபாரதம் போன்ற புராணங்கள் உணர்த்தியது. மேலும், சங்கக் காலத்திலும் மக்கள் தெய்வங்களுடன் தங்கள் வாழ்வை வாழ்ந்துள்ளனர் என்பதனைச் சங்க இலக்கியங்களான பரிபாடல்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



கலித்தொகை, திருமுறுகாற்றுப்படை, அகநானுறு, புறநானுறு போன்ற á ல்களில் மூலம் காணப்படுகின்றது. சங்க காலத்தில் எழுந்த நூல்கள் பெரும்பாலும் வரலாறு அடிப்படையில் புலவர்களால் பாடல் வழியில் எழுதப்பட்டிருக்கும். ஆனால், சிலப்பதிகாரம் காப்பியமோ இதற்கு அப்பால் மூன்று இடங்களையும், மூன்று உண்மைகளையும், மூன்று முக்கிய கதாபாத்திரங்களையும், மூன்று நாட்டு மன்னர்களையும் எடுத்துக் கூறும் வகையில் ஒரு காப்பியமாகப் படைக்கப்பட்டிருகின்றது. சிலப்பதிகாரக் காப்பியத்தில் இளங்கோ கதைக்கு முக்கியம் கொடுத்திருந்தாலும் பிற கூறுகளை இணைத்திருப்பது எதோ மற்றொரு நோக்கத்திற்காகக் காப்பியத்தைப் படைத்திருக்கலாம் என்று எண்ண இடமுண்டு. அவ்வகையில் சிலப்பதிகாரத்தில் இளங்கோ தெய்வம் அடிப்படையிலான விவரங்களையும் தெய்வங்கள் தொடர்பான வழிபாடு, நம்பிக்கை, விழாக்கள் போன்ற கூறுகளை இணைத்திருப்பது பக்தி உலகுக்குப் பெரும் துணைப்புரியும் என்பதில் ஐயமில்லை.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இந்த ஆய்வின் மூலம் மூன்று காண்டங்களில் காணப்படும் தெய்வங்களை அறியப்பட்டுள்ளது. வெவ்வேறு இடங்களில் வாழும் மக்கள் வெவ்வேறான தெய்வங்களை வழிபாடு செய்து வந்தது இவ்வாய்வின் மூலம் புலப்படுகின்றது. இதனைவிடுத்து, அக்காலத்தில் மக்கள் வழிபட்ட தெய்வங்களின் சிறப்புகளையும் இக்காலத்தில் அந்தத் தெய்வங்கள் வழிபடாததையும் அறிய முடிகின்றது. மேலும், தெய்வங்களின் தோற்றமும் இயல்பும் மனிதனுக்கும் இருக்க வேண்டும் என்பதனை இந்த ஆய்வு துல்லியமாக மக்களுக்குக் காட்டுகின்றது. சிலப்பதிகாரத்தின் காப்பியத்தில் வரும் கதாபாத்திரங்களின் உடல் அமைப்பு, குணம், வீரம் போன்றவைகள் இளங்கோ சித்தரிப்பதனால் புவிலில் வாழும் மனிதர்கள் தெய்வம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கொண்டிருக்கும் இயல்புகளைப் பெற்றிருக்க வேண்டும் என்ற கருத்தினை அறிய இயலுகிறது.

மனிதன் எவ்வளவுதான் இந்தப் பரபரப்பான வாழ்வில் மூழ்கி இருந்தாலும் இயற்கையை என்றும் மறந்து விடக்கூடாது என்ற கருத்துப் புலப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாக, இளங்கோ கடவுள் வாழ்த்து பகுதியில் மற்ற இலக்கியங்களைப் போல தெய்வங்களை முன்னிருத்தி பாடமல் மழை, சூரியன், சந்திரன் இன்னும் காப்பியத்தில் மரங்கள், கிரகங்கள், விலங்குகள் போன்றவைகளை வலியுறுத்துவதனால் மக்கள் இயற்கையை மதித்தலும் அதற்கு எந்த ஒரு கேடும் விளைவிக்கக் கூடாது எனத் துல்லியமாக அறியப்படுகின்றது. மனிதன் காடுகளை நேசிக்க வேண்டும், சூரிய வழிபாடு செய்ய வேண்டும் என்பதனை இதன் மூலம் அறியலாம். இயற்கையை நாசப்படுத்தும் காரியங்களில் மனிதன் என்றும் இருத்தல் கூடாது என்பதனையும் இவ்வுலகம் தெய்வம் படைப்பாக இருந்தாலும் அந்தப் படைப்பிற்கு உறுதுணையாக இருப்பது இயற்கைத்தான் என இளங்கோ மக்களுக்குப் பயன் தரும் வகையில் இக்காப்பியத்தின் மூலம் வெளிக்கொணர முடிகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதனைவிடுத்து, இந்த ஆய்வு மக்களுக்கு எந்தவொரு துயரங்கள் வந்தாலும் அதற்கு ஒரே தீர்வு தெய்வத்தை நம்பி இருப்பதுதான் என்ற கருத்தினை உணர்த்துகின்றது. ஒருவருக்குத் தனி நபர் அல்லது கூட்டுப் பிரச்சனையோ ஏற்பட்டால் ஒன்றாக அல்லது தனி நபராகவோ தெய்வங்களை ஒருமுகத்தோடு வழிபடுவதும், தெய்வங்களுக்குப் பிடித்த செயலை மனிதன் செய்வதனால் அப்பிரச்சனையிலிருந்து விடுப்பட முடியும் என்பதனை மக்களுக்கு உணர்த்துகின்றது. இச்சூழ்நிலை தற்காலத்தில் வாழும் மனிதர்களுக்கு மிகவும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


முக்கியம். காரணம் தற்கால மனிதர்கள் தங்களுக்கு ஏதாவதொரு பிரச்சனை ஏற்படும் போது தெய்வங்களை முழுமையாக நம்பாமல் பிற மதங்களில் சேருவதும், போலி சாமியார்களை அணுகுவதும் மிகப் பரவலாகக் காணப்பெருகின்றது. சிலர் மூடநம்பிக்கைகளைக் கொண்டிருப்பதனையும் காணமுடிகின்றது. தாங்கள் வணங்கும் தெய்வங்களிடம் முழுமையாகத் தங்களை ஒப்படைக்க வேண்டும் என்பதனையும் வாழ்க்கையில் மனிதர்கள் காணும் வெற்றியும் தோல்வியும் தெய்வங்களிடம் நன்றி கூறுவது மட்டுமல்லாமல் தெய்வங்களிடம் முழுமையாகச் சரணடைய வேண்டும் என்பதனை மக்களுக்கு இந்த ஆய்வு உணர்த்துகின்றது.

தொடர்ந்து, மனிதனும் தெய்வம் ஆகலாம் என்ற கருத்தினை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் காட்டுவதனால் பாமர மக்களுக்குப் பிறப்பிற்கு வரும் வாழ்வின் உண்மையான அர்த்தத்தை உணர வைக்கின்றது. மனிதன் மீண்டும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மீண்டும் பிறப்பு எடுப்பது அவன் செய்யும் கர்ம வினைத்தான் காரணம் என்று எத்தனையோ புராண இதிகாச கதைகளில் காண முடிகின்றது. வாழும் வாழ்வானது மக்களுக்குப் பயனுள்ள வாழ்க்கையாக இருக்க வேண்டும் என்பதனையும் பிறருக்கு எந்தவொரு தீங்கினையும் மனதாலும், உடம்பாலும் செய்யக் கூடாது என்பதனைச் சிலப்பதிகாரக் காப்பியத்தில் வெளிப்படும் கதாமாந்தர்கள் மூலமும், பின் அவர்கள் தெய்வ நிலைக்குக் கொண்டு செல்வதனையும் அறிய இயலுகிறது. ஆகவே, இப்புவியில் வாழும் மக்கள் நெறியுடனும் அறத்தைப் பின் பற்றி வாழ வேண்டும் என்றும் அப்படி வாழ்ந்தால் தெய்வ நிலைக்குச் செல்ல முடியும் என்று உறுதியாகின்றது. இதன் மூலம் மனிதன் தெய்வங்களைத் தேடி அலையாமல் தன்னுள்ளேயும் வாழும் வாழ்க்கையின் மூலமும் தெய்வத்தை உருவாக்க முடியும் என்பதனை இந்த ஆய்வின் மூலம் மக்களுக்குப் பயனாகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இந்த ஆய்வின் மூலம் மக்களுக்குத் தங்கள் வழிபாடு செய்யும் தெய்வங்களின் வகைகளை அறிய மிகவும் துணைப்புரிகின்றது. இளங்கோ அமைத்த இந்தச் சிலப்பதிகாரக் காப்பியத்தில் ஒரு வகை தெய்வங்களையும் அதன் தொடர்பான சமயங்களை மட்டும் கையாளமல் பல தெய்வங்களையும் சமயங்களையும் குறிக்கின்றது. தெய்வம் என்பன பெருந்தெய்வம், சிறுதெய்வம், இயற்கை தெய்வம், மனிதனான வாழ்ந்து பின் தெய்வ நிலைக்குச் செல்லுதல் சிலப்பதிகாரத்தில் இளங்கோ புலப்படுத்துகின்றார். சிறுதெய்வம் வழிபாடாகப் பூதம், கன்னி, காவல் தெய்வங்கள் என்று இக்காப்பியத்தில் அழகாகச் சித்தரிக்கப் படுகின்றது. இதன் மூலம் பாமர மக்கள் தாங்கள் இன்றளவும் எந்த வகையான தெய்வங்களை வழிபாடு செய்து வந்ததனை அறிய ஒரு வாய்ப்பாக அமைகின்றது. மேலும், பாமர மக்கள் பெருந் தெய்வங்களை அதிகமாக வழிபட வேண்டும் என்ற கருத்தினை இந்த ஆய்வின் மூலம் உணர்த்தப்படுகின்றது. மேலும், இந்து மதத்தின் சமயங்களையும் பிற மதங்களையும் இந்த ஆய்வின் மூலம் மக்களுக்குத் தெரிவது மட்டுமின்றி தற்கால மக்கள் பிற சமயங்களையும் மதங்களையும் மதித்து வாழ வேண்டும் என்ற கருத்தினை உணர்த்துகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதனைவிடுத்துக் கொண்டாடும் விழாக்கள் எந்த அளவிற்கு முக்கியம் என்பதனையும் அதன் அவசியத்தை மக்களுக்கு இந்த ஆய்வின் மூலம் உணர வைக்கின்றது. பெரும்பாலான விழாக்கள் தெய்வங்களுக்குத் தொடர்பாகவே கொண்டாடப்படுகின்றது. தைப்பூசத் திருவிழா, ஊர் திருவிழா, பொங்கல் விழா போன்ற விழாக்கள் தெய்வங்களுக்கு நன்றி கூறும் வகையில் கொண்டாடப்படும் விழாவாகக் கருதப்படுகின்றது. விழாவின் போதுதான் அனைத்து மக்களும் ஒன்று கூடி மகிழ்ந்து மிகவும் சந்தோஷத்துடன் விழாக்களைக் கொண்டாடுவதனைச் சிலப்பதிகாரம் அழகாகக் காட்டுகின்றது. விழா மானிட வாழ்க்கைக்கு மிகவும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அவசியம் என்பதனையும் அது தொன்றுத் தொட்டு வந்த கலாச்சாரத்தையும் பாரம்பரியத்தின் அடையாளம் எனவும் மக்களுக்கு ஒரு விழிப்புணர்வை இந்த ஆய்வு நிலை நாட்டியுள்ளது. இதன் மூலம் தற்கால மக்கள் விழாக்களின் மூலம் ஒன்று படுவதும் மட்டுமின்றி புரிந்துணர்வு, ஒன்றுமை போன்ற நற்பண்புகளை வளர்த்துக் கொள்வது மட்டுமல்லாமல் மனித உறவை மேலும் இருக்கமாக்கிக் கொள்ள ஏதுவாக அமைகின்றது. மேலும், தமிழர் பண்பாட்டு விழாவை அந்தக் காலத்தில் கொண்டாடபட்டதை இக்காலத்தில் அந்த விழாக்கள் கொண்டாடப்படாததையும் மக்கள் அறிய இந்த ஆய்வு துணையாக அமையும்.

தொடர்ந்து, இந்த ஆய்வு மக்களுக்குக் தெய்வங்களின் தோற்றம், பெயர்கள், மந்திரம், வாகனங்கள், தெய்வங்களின் துணைவர்கள், அவதாரங்கள், வேதங்கள், வேள்விகள், ஆயுதங்கள் போன்ற விவரங்களைத் தெளிவுப்படுகின்றது. ஐந்தெழுத்து மந்திரமான நமசிவாய மந்திரமும், திருமாலின் நாராயாண மந்திரத்தின் அவசியத்தை மக்கள் இந்த ஆய்வின் மூலம் அறிய இயலுகிறது. மேலும், தெய்வம் நிகழ்த்திய ஆடல்கள், அற்புதங்கள் இன்னும் அவதாரங்கள் இவ்வாய்வின் வழி வெளிக்கொணருவதனால் இந்து மதத்திற்குக் குறிப்பாகப் பக்தி உலகிற்கு ஒரு வித்தாக அமையும். மேலும், பாமர மக்கள் தெய்வங்களின் மீது தெளிவு இல்லாமல் இருப்பதனால் இந்த ஆய்வின் வழி இந்து மதத்தின் தெய்வங்களைக் காட்ட முடிகின்றது. மேலும், ஒர் இந்து கண்டிப்பாக மதத்தைப் போற்றுபவனாகவும் தங்களுக்கு மிகவும் பிடித்த தெய்வங்களை அவன் மனதார வழிபாடு செய்து இறை அருளை மிக விரைவாகப் பெற இயலும் என்ற கருத்தினைச் சிலப்பதிகார ஆய்வின் வழி மக்களுக்குப் பயனாக அமைகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மலேசியாவில் வாழும் பிற இனத்தவர்கள் நமது வழிபாட்டு முறையினையும் தெய்வங்களையும் முழுமையாக அறிய இந்த ஆய்வு துணைப்புரிகின்றது. பிற இனத்தவர்களுக்கு நமது தெய்வங்களின் தோற்ற அமைப்பு தொன்றுத் தொட்டு வந்தது என்ற எண்ணம் வர இந்த ஆய்வு பயனாக அமைகின்றது. மேலும், மலேசியா இந்துக்களும் நமது முறையான வழிபாடு முறையினைச் சிலப்பதிகார மக்கள் தெய்வ மீது கொண்ட நம்பிக்கையின் மூலம் அறிய இயலும். பிற இனம் கேலி செய்யும் அளவிற்கு நாம் செல்லாமல் உண்மையான தெய்வப் பக்தியைப் பின்பற்றி மலேசியா மண்ணில் வாழ இந்த ஆய்வு வழிவகுக்கின்றது.

இறுதியாக, மனிதன் வாழும் காலத்தின் அவன் செய்யும் தீயச் செயலுக்கு மிக விரைவாக இயற்கையின் மூலம் அவன் தண்டிக்கபடுகின்றான் என்ற கருத்தினை இந்த ஆய்வின் மூலம் வெளிப்படுகின்றது. ஆகவே, எக்காலத்திலும் மனிதர்கள் அவர்கள் வாழும் வாழ்க்கையில் தவறு செய்யாமல் இருக்க இது வழிவகுக்கும். மேலும், வாழும் வாழ்க்கையில் மனிதன் எந்தவொரு தவறு செய்யாமலும் நெறியுடன் வாழ்ந்தால் அவனுக்கு ஏற்படும் துயரங்களைத் தீர்க்க இயற்கை எதாவதொரு ரூபத்தில் துணைநிற்கும் என்பதனை விவரிக்கின்றது. இதன் மூலம் மனிதன் பிறருக்குத் தீங்கு செய்யாத வாழ்வையே வாழ்வான். ஆகவே, வரலாற்று இனவரைவியல் நோக்கில் சிலப்பதிகாரத்தை ஆய்வு செய்யும் இந்த ஆய்வு மக்களுக்கு தெய்வ சிந்தனையை ஊட்டுவது மட்டுமின்றி தொன்றுத் தொட்டுக் காக்கப்பட வேண்டிய பண்பாட்டையும் கலாசாரத்தையும் இந்த ஆய்வு உணர்த்துகின்றது. மேலும், மனிதன் தன்னை நம்புவது மட்டுமின்றி தெய்வங்களை நம்பி அனைத்துச் செயல்களுக்கும் முன் பிறவி செய்த வினைத்தான் காரணம் என்றும் அவ்வினையைப் போக்க நெறியுடன் தெய்வங்களிடம் ஒன்றியும் வாழ வேண்டும் என்ற வழியை இந்த ஆய்வு எடுத்துக் கூறுகின்றது. இளங்கோ

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சிலப்பதிகாரக் காப்பியத்தின் மூலம் மனித மானிடவியலைக் குறிப்பாக மக்கள் கொண்டிருக்கும் தெய்வ வழிபாடு, நம்பிக்கை, விழாக்கள் தற்கால மக்களுக்கு மிகவும் பயனாக அமைகின்றது.

## 1.7 ஆய்வு எல்லை

சிலப்பதிகாரம் காப்பியம் முப்பெரும் உண்மைகளை உணர்துவது மட்டுமல்லாமல் காப்பியம் முழுவதும் பிற சிறப்புகள் உடைய காப்பியமாக அமைகின்றது. இயல், இசை, நாடகம், இயற்கை, அரசியல், வாணிகம், தெய்வம், கலைகள் எனக் காப்பியம் முழுவதும் நிறைந்திருகின்றது. இந்த ஆய்வில் ஆய்வாளர் சிலப்பதிகாரம் காட்டும் தெய்வங்கள் தொடர்புடைய கூற்றை ஆராய்வது மட்டும் இந்த ஆய்வின் எல்லையாகும். இதனைவிடுத்துத் தெய்வம் தொடர்புடைய விவரங்களான தெய்வ வகைகள், வழிபாட்டு முறைகள், நம்பிக்கை, சமயம், விழாக்கள் போன்றவைகளும் இந்த ஆய்வில் அடங்கும். மேலும், இந்த ஆய்வு சிலப்பதிகாரக் காலத்தில் மக்களின் வாழ்வைக் கொண்டிருப்பதனால் இது மானிடவியல் அடிப்படையில் ஓர் இனவரைவியலுக்கு உட்பட்டது. இனவரைவியல் என்று கூறப்படுவது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது சமூகத்தைப் பற்றிய முழுமையான ஆய்வாகும். பக்தவத்சல பாரதி கூற்றின்படி ஒரு முழுமையான இனவரைவியலை ஆராயும் ஆய்வாளர்கள் 53 கூறுகளை (காண்க அட்டவணை 1 - பக் - 242) அடிப்படையில் ஏற்ற அணுகுமுறைக் கேற்பவும், கோட்பாட்டுப் பின்புலதிற்கேற்பவும் ஆராய வேண்டும். அந்தக் கூறுகளில் தெய்வம், வழிபாட்டு முறைகள், விழாக்கள், சமய நம்பிக்கைகளை மட்டும் ஆராயும் எல்லைக்குள் இந்த ஆய்வு உட்பட்டது. சுருங்கக்கூறின் இந்த ஆய்வு சிலப்பதிகாரக் காப்பியத்தில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மக்கள் கொண்டிருக்கும் தெய்வம் பற்றிய விவரங்களை வரலாற்று இனவரைவியல் நோக்கில் ஆராய்வதாகும்.

## 1.8 ஆய்வு சான்றாதாரங்கள்

வரலாற்று இனவரைவியல் நோக்கில் சிலப்பதிகாரம் என்ற இந்த ஆய்வானது சிலப்பதிகாரக் காப்பியத்தில் ஒரு குறிப்பிட்டப் பகுதியை மட்டும் ஆராய்வதாகும். இந்த ஆய்விற்கான தகவல்களைத் திரட்ட ஆய்வாளர் பல சான்றாதாரங்களைப் பயன்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. சேகரிக்கப்பட்ட தகவல்களை ஆய்வாளர் முறையாகயும் தேவையான தகவல்களையும் மட்டும் சரியாகப் பகுத்து இந்த ஆய்விற்குப் பயன்படுத்தியுள்ளார். அவ்வகையில் இந்த ஆய்விற்கான தகவல்களைத் திரட்டி ஆய்வாளர் ஆய்வு சான்றாதாரங்களை முதன்மை துணைமைச் சான்றாதாரம் என்று பிரித்துள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.8.1 முதன்மைச் சான்றாதாரம்

சிலப்பதிகாரம் என்ற காப்பியம் புத்தகம் வடிவம் ஆனாதால் ஆய்வாளர் இந்த ஆய்விற்குப் புத்தகங்களை முதன்மைச் சான்றாதாரமாகப் பயன்படுத்தியுள்ளார். சிலப்பதிகாரம் முதன்மையாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்விற்கு தொடர்புடைய விவரங்களை மட்டும் ஆய்வாளர் பக்தவத்சல பாரதி புத்தகங்களிருந்து எடுத்து இந்த ஆய்வில் இணைத்துள்ளார். இதனைவிடுத்துப்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


புத்தகங்களிலிருந்து எடுக்கப்படும் தகவல்கள் அனைத்திற்கும் ஆய்வாளர் மேற்கோள்காட்டியுள்ளார்.

### 1.8.2 துணைமைச் சான்றாதாரம்

புத்தகங்களைத் தவிர இந்த ஆய்விற்கு மேலும் தரவுகளை அதிகப்படுத்த ஆய்வாளர் பிற சான்றாதாரம் மூலங்களை அணுகியுள்ளார். ஆய்வாளர் ஆய்வேடுகள், ஆய்வு நூல்கள், ஆய்வுக்கட்டுரை, களஞ்சியம், புத்தகம் போன்றவைகளைத் துணைமைச் சான்றாதாரமாகப் பயன்படுத்தியுள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.9 கலைச்சொல் விளக்கம்

இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ள ஆய்வு தொடர்பான முக்கியச் சொற்களின் விளக்கம் கூறப்பட்டுள்ளது.

### 1.9.1 சிலப்பதிகாரம்

ஐம்பெருங்காப்பியங்களில் சிலப்பதிகாரம் காப்பியம் ஒன்றாகும். சிலப்பதிகாரம் என்ற காப்பியம் சிலம்பு, அதிகாரம் என்ற இரு சொல்லின் புணர்ச்சியால் உருவகப்பெற்றது (துரைசீனிச்சாமி, 2013). சிலப்பதிகாரக் காப்பியக் கதை சிலம்பை முன்னிறுத்தி விளைந்த கதை என்பதானால் சிலப்பதிகாரம் என்றானது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இயல், இசை, நாடகம் என்று முத்தமிழையும் குறிப்பதாகவும் இக்காப்பியம் அமைகின்றது (இராமசுப்பிரமணியம், 2009). சிலப்பதிகாரக் காப்பியம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இளங்கோவடியால் எழுதப்பட்டது (சாமிநாதையர், 2013). சிலப்பதிகாரக் காப்பியத்தை இளங்கோ எந்தவொரு சமயத்தையும் சான்று படைக்காமல் பல சமயங்களை இதில் இணைத்துள்ளார் (மறைமலையடிகள், 2008). பழங்குடி மக்களின் வாழ்வு எவ்வகையாக அமையப்பெற்றது என்பதற்கு இக்காப்பியம் ஒரு முன்னோடியாக அமைகின்றது (ஆனந்தன், 2013).

1.9.2 மானுடவியல்

மானுடவியல் என்பது மனிதர்களைப் பற்றி ஆராயும் ஒரு துறையாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மானுடவியல் என்பது மனித இனத்தின் கல்வித்துறை என்றும் கூறப்படுகின்றது (இசக்கி, 2013). மனிதனை முழுக்க ஆராயும் இந்தத் துறை *anthropology* என்ற ஆங்கில வார்த்தையாகும். இஃது இரண்டு கிரேக்க சொல்லைச் சேர்ந்தது. அதாவது 'anthropos' என்று மனிதனையும் 'logia' என்ற சொல் படிப்பையும் குறிப்பதனால் மனிதனைப் பற்றிய கல்வி என்று பொருள்படுகின்றது (பக்தவத்சல பாரதி, 2014), கருத்தின்படி மானுடவியல் என்பது மனிதக் குழுவை முழுமையாக ஆராயும் ஒரு துறையாகும். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய மனிதனின் முக்கால வளர்ச்சி என்றும் அவனைச் சார்ந்து ஆராயும் அனைத்தும் மானிடவியல் என்று குறிப்பிடுகின்றார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


1.9.3 பண்பாடு

ஒரு சமுதாயம் தொன்றுத் தொட்டு நிலைத்திருக்க பண்பாடு மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி (2006), பண்பாடு என்ற சொல் கலாசாரத்தைக் குறிப்பதாகும். பண்பாடு என்பது மனிதன் கொண்டிருக்கும் மரபுகள், வரலாறு, விழுமியங்கள், கலைகள், சமூகம், பொருளாதாரம், அரசியல் போன்றவைகள் பண்பாட்டில் அடங்கும். பக்தவத்சல பாரதி (2014), கூற்றின்படி பெரிய துறையாகக் கருதப்படும் மானுடவியலில் பண்பாடு என்பது ஒரு பிரிவாகும். கலாச்சார அல்லது பண்பாட்டு ஒரு சமூகத்தின் அறிவையும், மதிப்பீடுகளையும் பழங்காலம் முதல் தொன்றுத் தொட்டு வரும் பாரம்பரிய வழிகள் மூலம் உலகத்தை அணுகுவது ஆகும். மேலும், ஒவ்வொரு தலைமுறையும் இதற்கு முந்திய தலைமுறையிடமிருந்து பெற்று அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வதாகும் என்று குறிப்பிடுகின்றார் (கைலாசபதி, 2011).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.9.4 இனவரைவியல்

இனவரைவியல் என்பது 'ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது சமூகத்தைப் பற்றிய வரைவு' எனும் பொருளைத் தருகிறது. பக்தவத்சல பாரதி (2012), பார்வையில் பண்பாட்டு மானிடவியலில் முக்கியமான ஓர் உட்பிரிவு இனவரைவியல் *(ethnography)* என்கிறார். இனவரைவியல் எனும் பொருளுடைய *'ethnography'* எனும் ஆங்கிலச் சொல் *'ethnos'*, *'graphein'* ஆகிய கிரேக்கச் சொற்களின் மூலங்களைக் கொண்டுள்ளது. *'Ethnos'* என்பதற்கு 'இனம்', 'இனக்குழு', 'மக்கள்' என்பது பொருள், *Graphein* என்பதற்கு 'எழுதுதல்' அல்லது 'வரைதல்' என்பது

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பொருள். இனவரைவியல் இனக்குழுவைப் பற்றிய முறையான, முழுமையான, விளக்கமான படிப்பு ஆகும்.

1.9.5 இனம்

உயிரினங்கள் தனித்தனியே இருந்த பின் தங்களுக்குரிய குழுவில் அடங்கும் பொழுது இனமாக அடையாளங் காணப்படுகின்றது. இனம் என்றால் பல வகைகளை உள்ளடக்கிய பொது மற்றும் பெரும் பிரிவைக் குறிப்பிடுவதாகும். பல உறுப்பினர்களை அல்லது உட்பிரிவுகளை ஒரே வகையில் இனம் என்று குறிப்பிடுவர். எடுத்துக்காட்டுத் தாவர இனம், மனித இனம், விலங்கு இனம் போன்றவைகள் ஆகும் (க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, 2006).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

1.9.6 இனக்குழு

உயிரினங்கள் குழுவாக இருந்த போது பின்பு அந்தக் குழுவிற்கு ஏற்ற இனக்குழுவாகப் பிரிக்கப்படுகின்றது. இனக்குழு என்பது இனத்திலிருந்து தோன்றும் சில பிரிவுகளைக் குறிப்பதாகும். அந்தப் பிரிவுகள் சில குழுக்களாக அமைந்து மொழி, பழக்க வழக்கங்கள், சமயம், நம்பிக்கை, பண்பாடு, வாழ்க்கை சூழல் போன்றவைகளில் சமமாக அமைந்து ஒரு குறிப்பிட்ட இடங்களில் வசிப்பவர்களாகக் கருதப்படுகின்றார்கள் (பக்தவத்சல பாரதி, 2012).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


1.9.7 வரலாறு

வரலாறு என்பது இறந்த காலத்தைப் பற்றி படிக்கின்ற ஒரு பாடம் ஆகும். எழுதப்பட்ட பதிவுகளுக்கு முன்பாக நிகழ்ந்தவை அனைத்தும் வரலாற்றுக்கு முந்தைய நிகழ்வுகள் எனக் கருதப்படுகின்றன. வரலாற்றைப் பற்றி ஆய்வு செய்கின்ற அறிஞர்கள் வரலாற்று அறிஞர்கள் எனப்படுகின்றனர். வரலாறு ஒரு பாடப்பிரிவாகக் கருதப்படுவது மட்டுமின்றி கடந்த கால நிகழ்வுகளின் வரிசைமுறையை ஆய்வு செய்வதற்கும், அவற்றை விளக்குகின்ற ஒரு விரிவுரையாகவும் பயன்படுகிறது. கடந்தகால நிகழ்வுகளுக்கான காரணங்களையும், விளைவுகளையும் அறிந்து அவற்றை உறுதிப்படுத்தவும் வரலாறு பயன்படுகிறது. வரலாற்றாசிரியர்கள் வாழும் காலத்தின் பின்னணியில் கடந்த காலத்தின் நிகழ்வுகளை விளக்கி வரலாறாக எழுதுகின்றனர். மற்றும் சில சமயங்களில் தங்களின் சொந்த சமுதாயத்திற்கான பாடங்களாகவும் இவர்கள் வரலாற்றை எழுதுகின்றனர் (வாழ்வியற் களஞ்சியம், 1988).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.10 தொகுப்புரை

ஐம்பெருங்காப்பியங்களில் முதன்மையாக அமையும் சிலப்பதிகாரக் காப்பியம் மானிடவியல் வளர்ச்சியினை மிக தெளிவாக எடுத்துக்கூறுகின்றது. தற்காலத் தமிழர் கொண்டிருக்கும் வழிபாடு, நம்பிக்கை, விழாக்கள், சமயம் போன்றவைகள் அக்காலத்தில் இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்தில் காணப்பெருதலையும், தொன்றுத் தொட்டும் அப்படியே பின்பற்றியும் சில மாற்றங்களிலும் அமைந்திருப்பதனை இந்த ஆய்வின் மூலம் அறியலாம். இந்தப் புவியை இயக்கும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தெய்வங்களின் சிறப்பை எவ்வாறு இக்காப்பியத்தில் மூன்று காண்டங்களில் பரவி இருப்பதனை அறியலாம். மேலும், சிலப்பதிகார மக்கள் இயற்கையுடனும் தெய்வங்களுடனும் ஒன்றி இருந்த காரணத்தாலும் அவர்கள் கொண்டாடும் விழாக்கள், நம்பிக்கைகள், சமயங்கள் அனைத்தும் தெய்வங்களைச் சார்ந்தே அமைந்துள்ளது. ஆகவே, இந்த ஆய்வு தமிழினத்தின் பண்பாட்டை வரலாற்று இனவரைவியலோடு ஆராயப்படுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi